673

காஞ்சி

ஆசிரியர்: அண்ணாதுரை

மலர்: 1. இதழ்: 42.



விலை 20 காசு

ஒளி மறைந்து - ஓராண்டு

மலர் 1 30—5—65 இதழ் 42

ஓராண்டு உருண்டோடி விட்டது; ஒளி அளித்து வந்த பண்டித நேரு மறைந்து.

ஒவ்வொரு விநாடியும் துடிதுடிப்புடன். மனஎழுச்சி யுடன் பணியாற்றிக் கொண்டுவந்த மாபெருந்தலைவன், இலட்சியக் கனவுகளைக் காண்பதிலும் மக்களைக் காணச் செய்வதிலும், அந்தக் கனவுகளை மெய்நிலைக் ளாக்கப் பாடுபடுவதுமாக இருந்துவந்த இணையற்ற மாவீரன், இல்லாமை, அறியாமை எனும் கேடுகளைக் களைந்து. ஏழையின் வாழ்விலே புதுமை மலரவேண்டும் என்பதற்காக, திட்டமிட்டபடி இருந்துவந்த செயல் வீரர் மறைந்து ஆண்டு ஒன்றுகிவிட்டது.

கண்ணீர், பெருமூச்சு. கலக்கம், திகைப்பு, தத்தளிப்பு எனும் எவற்றைக் கண்டும், காலம் தனது வேகத்தைக் குறைத்துக கொள்கிறதா! இல்லையே! அது உருண்டோடியபடி இருக்கிறது; எவை உருக் குலைந்தாலும். எவை புத்துருப் பெற்றாலும். பூங்காற்று வீசிப் புதுமலர்களை உதிரச் செய்தாலும் பேய்க் காற் றடித்துப் பெருமரங்களைச் சாய்த்தாலும், அருவி வறண் டிடினும் வெள்ளம் அழிவு மூட்டிடினும், அரசுகள் வீழ்ந்துபடினும், அறம் சாய்ந்திடினும், நல்லன தோன் றிடினும் தீயன விளைந்திடினும், எவை எம்முறையில் எந்நிலை அடைந்திடினும், புன்னகை புரிந்திடவோ, போற்றிப் புகழ்ந்திடவோ, கண்ணீர் சொரிந்திடவோ ஆறுதல அளித்திடவோ காலம் நின்றுகொண்டிருப்ப தில்லை. எல்லாவற்றையும் கண்டபடி, தன் போக்கிலே நடைபோட்டபடி இருக்கிறது. இதயமற்றது போலும் காலம்!

மறைந்த நேரு. நல்ல இதயம் படைத்தவர்; அவ ரிடமிருந்த அறிவாற்றல் வேறு பலரிடம் இருந்திருக் கிறது. இனியும் இருந்திடலாம்; ஆனால் அறிவாற்ற லுடன் அவருக்கு இதயம் இருந்தது! பாலைவனத்தைச் சோலைவனமாக்க, மனிதனின் கடினமான உழைப்பைக் குறைத்திட உதவும் கருவிகளைத் தொழிற்சாலைகளில் அமைக்க. நாட்டிலே புதுக்கோலம் எழுந்திடச் செய் திட, அறிவாற்றல் வேண்டும்; அதனைப பெற்றிருந்த அப்பெருமகன், குழந்தையின் மழலை கேட்டதும், தானும் குழந்தையாகிவிடும் இயல்பினை, ஏழை வதை படுவதைக் காணும்போது அவன நிலை எண்ணிக். கண்ணீர் சிந்திடும இரக்கத்தினை, நல் இதயத்தை பெற்றிருந்தார்.

ஆட்சியிலே அவர் கையாண்ட செயல் முறைகள் குறித்து கருத்து மாறுபாடு கொண்டோருங்கூட அவ ரிடமிருந்த அந்தப் பண்பினுக்குப் பாராட்டுத் தெரிவித் திடத் தயங்கினதில்லை.

நிலை உயர உயர, நெறித்த புருவத்தினராகி விடு வதும், அதிகாரம் குவியக் குவிய 'ஆள் மிரட்டி' ஆகி விடுவதும் உண்டு; அரசியல் உலகில் இத்தகையோர் பலர் உளர். ஆனால் நேருவின் நிலையும் புகழும், அதி காரமும் ஓங்க ஓங்க, அவருடைய இதயத்திலே கனிவு மிகுதியும் இடம் பெற்றது; கண்கள் கவிபாடலயின!

என்னிடம் இத்தனை அன்பு காட்டிடும் மக்களுக்கு நான் நிரம்பச் செய்யவேண்டுமே; முடியவில்லையே, செய்தளித்திருப்பது போதாதே என்ற கவலை கப்பிக் கொள்ளும் நிலை அவருக்கு அடிக்கடி; ஏழ்மையின் கொடுமைகளைக் காணும்போதெல்லாம்.

நிலை உயர உயர, தலைவர்களுக்கும் மக்களுக்கும் இடையில் ஒரு பயங்கரமான 'இடைவெளி' அமைந்து விடுவதுண்டு; பண்டித நேரு இதற்கு இடம் கொடுக் கவேயில்லை. மக்களுடன் கலந்து உலவிட, உரை யாடிட, அவர் உள்ளம் அறிந்திட அவர் எப்போதும் துடிதது வந்தார். மக்களும் அவரைக் காண்பதிலே தனிக்கவர்ச்சி கண்டனர்.

பாராளுமன்றத்திலே, முதியவர் நேரு அமர்ந் திருந்தார்! திடல்களிலேயோ, இளைஞர் நேரு உலவி னார்; உற்சாகமளித்தபடி, உறுதி அளித்தபடி, நம் பிக்கை யூட்டியபடி.

சிறந்த ஜனநாயகப் பண்பாடு பூத்திடவேண்டும் என்பதிலே மிகுந்த அக்கரை காட்டிவந்தார். அவர் ஏறபடுத்திவிட்டுச் சென்றுள்ள அந்தப் பண்பு பாழ் படாமல் இருந்திடச் செய்தல்வேண்டும்; அனைவருக் கும் அதிலே பொறுப்பும் பங்கும் நிச்சயம உண்டு.

நிலை உயர உயர, தலைவர்கள் எனக்கு இதற்கெல் லாம் நேரம் இல்லை என்று கூறிக்கொள்வதைப் பெரு மைக்கு அடையாளமாக்கிக்கொள்வர் பண்டித நேரு அவ்விதம் இருந்ததில்லை. பார்புகழ் நிலை பெற்றபிறகும், அவருக்கு நல்ல கவிதைகளைப் படிக்க, கேட்க; இசை நுகர, நாடகம் கண்டுகளித்திட, மலைவளம் காண்ப திலே மகிழ்ச்சிபெற, மலர் மணம் நுகர, மழலைகளைக் கேட்டு இன்புற, ஓவியம் கண்டு வியந்திட, நேரம் கிடைத்தது, நினைவு இருந்தது. காரணம், அவர் மூளை பலத்தை மட்டும காட்டி, மக்களை வியப்படையச செய் திட்ட தலைவர் அல்ல, தமது இதயததைக் காட்டி மக்

களின் இதயம்வென்றவர். அதன் காரணமாகவே பல் வேறு அரசியல் கட்சியினரும் அவருடைய நினைவைப் பசுமையாகக்கொண்டுள்ளனர்; அவருடைய நோக்கம் நிறைவேற, தத்தமக்குச் சரியென்று தோன்றிடும் முறையில் பணியாற்ற விழைகின்றனர். அதற்கான உறுதி பெறும் நாளாக, நேரு மறைவு நாள் பயன்படுதல் வேண்டும்.

நேருவின் பெயர் கூறி அவருடன் அமைந்துள்ள அரசியல் உறவு கூறி, ஆதாயம் தேடிக்கொள்வாரின் முகாம் அல்ல, நமது கழகம்.

கருத்து மாறுபாடு தோன்றியபோது, அச்சமின்றி எடுத்துக் காட்டியது நமது கழகம்.

ஆனால், அவரிடம் இருந்த நல்லியல்பினையும், நல் இதயத்தையும் பாராட்டிப் போற்றுவதற்குத் தயங்கியதில்லை.

நேரு விரும்பிய ஜனநாயகப் பண்பினைச் செம்மைப்படுத்திட, உண்மையான சமதர்ம நெறி மலர்ந்திட, பகுத்தறிவு அரசோச்ச, கழகம் தனக்குக் கிடைத்திடும் வாய்ப்பின் துணைகொண்டு பணியாற்றிட முனையும். மறைந்த மாவீரரின் நினைவுநாளன்று, கழகம், அதற்கான உறுதியைப் பெற்றுக்கொள்கிறது.

சிற்பி செதுக்கிய சிங்கம்

திராவிட முன்னேற்றக் கழகம், இனி இரண்டு ஆண்டுகளுக்குக் கிளர்ச்சியில் ஈடுபடாது; பொதுத் தேர்தலுக்கான பணிகளில் மும்முரமாக ஈடுபடும் என்று அறிவிக்கப்பட்டதை வரவேற்றிருக்கிறது 'மெயில்' இதழ்.

தி. மு. கழகத்திடம் முழுஅளவு பரிவு காட்டக் கூடியது 'மெயில்' இதழ் என்று நாம் என்றுமே எண்ணிக்கொண்டதில்லை; எனவே கிளர்ச்சி இல்லை என்பதனை வரவேற்கும் போக்கிலேயே, தவறான சில கேலிக் கருத்துக்களையும் இணைத்திருப்பது கண்டு நாம் ஏமாற்றமும் அடையவில்லை, எரிச்சலும் கொள்ளவில்லை.

ஆளும் கட்சியை ஏதாவதொரு வகையில் திருப்திப்படுத்தியாக வேண்டும் என்ற நிலை பல இதழ்களுக்கு இருந்துவருகிறது.

ஆளுங் கட்சியின் கோபப் பார்வையிலிருந்து தப்பித்துக் கொள்ளவும், புன்னகையைப் பரிசாகப் பெறவும், பல இதழ்கள் முயலுவது காணும்போது, உள்ளபடி நமக்குப் பரிதாபமாகவே இருக்கிறது.

ஆளுங் கட்சியின் புன்னகையைப் பெறுவதற்கு உள்ள மிக எளிய வழி, தி. மு. கழகத்தை ஏசுவது, கண்டிப்பது, கேலி செய்வது என்ற முறையைப் பல இதழ்கள் மெத்தத் திறமையுடன் காட்டிவருகின்றன.

நமக்கு இருக்கும் மகிழ்ச்சியெல்லாம், இவ்வளவுக்கும் இடையில் முக்கியமான பிரச்சினைகளில், இந்த இதழ்கள் ஆளுங் கட்சியின் போக்கைத் துணிந்து கண்டிக்கின்றனவே என்பதுதான். ஜனநாயகக் கடமையை ஒரோர் சமயத்திலேனும் நிறைவேற்றுகின்றனவே என்பதற்காக அந்த இதழ்களைப் பாராட்டவும் விரும்புகிறோம்.

கழகம் பற்றி நாலு வார்த்தை கண்டித்து எழுதிவிடுவது கண்டு நாம் எரிச்சல் கொள்ளவில்லை. எதிர் நீச்சலிடுபவர்களுக்கு, இதனைத் தாங்கிக் கொள்வதிலே கஷ்டம்கூட அதிகம் இல்லை.

ஆகவே எரிச்சலால் அல்ல. தெளிவளிக்க வேண்டும் என்பதற்காகச் சில கூற விரும்புகிறோம்.

கிளர்ச்சிகளாலேயே வளர்ந்தது கழகம் என்று மெயில் கூறுகிறது. தவறு. மேலெழுந்தவாரியான தோற்றம்; நுனிப்புல் மேயும் போக்கு. மெயில் இதழிடம் நாம் இதனைவிட அறிவு மிக்கதோர் போக்கை எதிர்பார்க்கிறோம்.

கழகம், கிளர்ச்சிகளை நடத்தி இருக்கிறது; நடத்த இருக்கிறது; கிளர்ச்சிகளை நடத்துவது ஜனநாயகத்துக்கு முரணானதல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனால், கிளர்ச்சிகளை நடத்துவதற்காகவே உள்ளது அல்ல கழகம்! கழக வளர்ச்சி கிளர்ச்சிகளை நடத்துவதனாலேயே கிடைத்ததுமல்ல.

கிளர்ச்சிகளைத்தேடி அலையக்கூடாது! தேவைப்பட்டால் நடத்தத் தயங்கக்கூடாது என்பது கழகத்தின் கோட்பாடு. கழகத்துடன் சேர்ந்து வளர்ந்தவர்களுக்கும் தொடர்ந்து அதன் போக்கைக் கவனித்து வந்தவர்களுக்கும் இது புரியும். மெயில் இதழ் இதனைப் புரிந்து கொள்ளாததில் வியப்பு இல்லை. புரிந்துகொள்ள முயற்சிக்கலாம்; தவறு இல்லை!!

கிளர்ச்சி பலிக்கவில்லை, ருசிக்கவில்லை, ஆகவே கிளர்ச்சி இனி இல்லை என்று கழகம் தீர்மானித்துவிட்டதுபோலும்—என்ற பொருள்பட மெயில் எழுதுகிறது. இது பொருளற்ற கேலிப்பேச்சு. கழகத்தைக் கிண்டல் செய்து எழுதிவிட்டோம் என்று கோடிட்டுக் காட்டி, காங்கிரஸ் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கலாம்; ஏதாவது எதிர்பார்க்கக்கூடச் செய்யலாம். ஆனால் பொருளுள்ளது என்று ஆய்வாளர் எவரும் கூறிடமாட்டார்கள்.

கிளர்ச்சிகளை நடத்துவதிலே சுவை தேடவுமில்லை; ஒவ்வொரு கிளர்ச்சிக்கும் உடனடிப் பலனைத் தேடுவதும் முறையாகாது.

நிலைமையைவிளக்க, சர்க்காரை சிந்திக்கவைக்க, மக்களிடம் எழுச்சியூட்ட எனும் எத்தனையோ பலன்களைப் பெற்றளிக்க வல்லது கிளர்ச்சி.

சுவை காணாமல் சலித்துப்போய் விட்டுவிடுவது என்ற பேச்சுக்கே பொருள் இல்லை. ஆட்சியினர், கோரிக்கைகளை அலட்சியப்படுத்தும்போது, உரிமைகளைப் பறிக்கும்போது, கிளர்ச்சி எழுகிறது. மக்களின் மனப்போக்கை மதித்திடத்தக்கவிதமாக அரசு அமையும் வரையில், கிளர்ச்சிகள் தேவைப்படும்.

கேலிக்காக அல்ல—நிலைமை விளக்கத்துக்காகக் கூறுகிறோம்—மெயில் இதழ் அறிவாராய்ச்சியுடன் தீட்டுகிறதே தலையங்கங்கள், அவைகளை மதித்து, அரசு நடந்துகொள்கிறதா! காணோமே! கிளர்ச்சி செய்யாமல் அறிவைத் தூண்டிவிடும் தலையங்கம் தீட்டிடும் மெயில் இதழுக்கு மதிப்பளிக்கும் முறையில் அரசு நடந்து கொள்ளுமானால், கிளர்ச்சி எதற்கு என்று மெயில் கேட்கலாம்.

ஆனால் இன்றைய அரசு மெயில் இதழ் போன்றவைகளின் கருத்துரைக்கும் மதிப்பளிப்பதில்லை; கிளர்ச்சிகளுக்கேகூட மதிப்பு அளிக்கத் தயங்குகிறதே! இந்நிலையில் கிளர்ச்சி எதற்கு என்று கேட்பது. தவறு.

கிளர்ச்சியை விட்டு விடுவதால், கழக வலிவு குறைந்துவிடுமோ என்ற சந்தேகத்தையும் மெயில் கிளப்பியிருக்கிறது — நல்லெண்ணத்துடன் என்றே எடுத்துக்கொள்கிறோம்—மெயில் கவலைப்படத் தேவையில்லை—கழக வலிவு, கிளர்ச்சி நின்று விடுவதால் குலைந்துவிடாது.

மீண்டும் கூறுகிறோம்—கழகம் கிளர்ச்சி செய்வதற்காகவே உள்ளது அல்ல; கிளர்ச்சியே செய்யக் கூடாது என்ற மேனா மினுக்கியும் அல்ல; கழக வளர்ச்சி, கிளர்ச்சியினால் மட்டுமே இல்லை; கழகம் கிளர்ச்சியை நிறுத்திவைப்பது தோல்வி கண்டு அல்ல.

கழகம், ஜனநாயக அமைப்பு. யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும இன்று தமிழகத்தில், காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தைத் தட்டிக் கேட்டிடவும், தடுத்து நிறுத்திடவும், மாற்றுசர்க்கார் கண்டிடவுமான அமைப்பாக உள்ளது, கழகம்தான்; மற்றவை, அடுத்தபடி, அடுத்தபடி என்ற நிலையில்தான்.

பொதுத் தேர்தல், மிகப் பெரிய ஜனநாயகக் கடமை: அதற்குத் தன்னைத் தயாரித்துக்கொள்ள கழகம் விரும்புகிறது; நேரம், நோக்கம், வலிவு, வாய்ப்பு இவைகளைச் சிதறடித்துக்கொள்ள விரும்பவில்லை. எனவேதான் கிளச்சி இல்லை என்ற முடிவு.

மிகப் பெரிய, திறமைசாலிகளான தலைவர்கள் கழகத்திலே இல்லை என்ற பொருள்பட மெயில் எழுதுகிறது. இதற்கு நாம் கூறக்கூடியது இதுதான்; காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நிற்க, நாங்கள் முனைந்து நிற்கிறோம், எங்களுக்குள்ள திறமை குறைவாக இருக்கலாம். அதற்காக நாங்கள் வெட்கப்படத் தேவையில்லை; வெட்கப்பட வேண்டியவர்கள் யார் எனில், அபாரமான திறமையை வைத்துக் கொண்டிருப்பதாகக் கருதிக் கொண்டிருப்பவர்கள், ஜனநாயகக் கடமையாற்றிடத் துணிவற்று, சாய்வு நாற்காலியில் வீற்றிருந்தபடி மாலைநேர உபதேசங்களை மேதாவித்தனத்துடன் அருளிக்கொண்டு. ஊர்மக்களிடம் உறவாட, விழிப்புண்டாக்க, ஆட்சியாளர்களின் எதிர்ப்பைத் தாங்கிக்கொள்ள, இன்னலை ஏற்கப் பயந்துகொண்டு இருக்கிறார்களே, அவர்கள். நாங்கள், சாமான்யர்கள், ஆனால் கடமையைச் செய்துகொண்டு வருபவர்கள், தழும்புகளைப் பெற்றவர்கள். நாங்கள் பெரிய திறமை மிக்க தலைவர்கள் அல்ல என்று கூறிவிடுவது எளிது; ஆனால் மெயில் இதழினுக்குக் கூறிக்கொள்கிறோம், சிற்பி செதுக்கிய சிங்க உருவத்தைக் காட்டிலும், விழிப்புடன் இருக்கும் வேட்டை நாய் வீட்டையும், தோட்டத்தையும் காத்திடும்! அதற்குப் பிடரி இல்லையே கத்தையாக என்று கூறுவது ஏமாளித்தனம்.

❀

பெருமிதம்

எவரெஸ்ட் உச்சி ஏறிப் புகழினைத் தமக்கும் நாட்டுக்கும் ஈட்டிய மாவீரர்களை வாழ்த்திப் பெருமிதம் கொள்கிறோம். அஞ்சாநெஞ்சமும், சலியாத உழைப்பும், தனித்திறமையும் கொண்டால்மட்டுமே சாதிக்கக் கூடிய, அரும்பெருஞ் செயலினைச் செய்துகாட்டிய அம் மாவீரர்களை, இங்குமட்டுமல்ல. வீரச் செயலினுக்கு மதிப்பளிக்கும் நாடு பலவற்றிலும், வாழ்த்துவர்; வாழ்த்துகின்றனர்.

பனிப்படலம் மிகுந்ததும், விண்ணைத் தொட்டுக் கொண்டிருக்கிறதோ என்று எவரையும் மலைத்திடச் செய்யும்விதமாக அமைந்திருப்பதுமான எவரஸ்ட் சிகரத்தை, வெளிநாட்டவர் மட்டுமே சென்றடைந்து காட்டினர் என்றிருந்த நிலை, நாட்டின் மதிப்பினை ஓரளவு மங்கச் செய்வதாக இருந்தது. அதனை மாற்றினர் மாவீரர்கள்—எவரஸ்ட் உச்சி சென்று நின்றனர்!!

மலை உச்சிகள் ஏறுதல், ஆழ்கடலுக்குள் மூழ்கி ஆங்குள்ளனவற்றைக் கண்டறிதல்போன்றவை, வீரச் செயல்கள் மட்டுமல்ல, புதிய கண்டுபிடிப்புகளைப் பெற்றளித்திடவும் உதவிடுவதாகும்.

விண்வெளிப்பயணமும் அதுபோன்றதே எனினும் அழிவுக் கருவிகளை ஏவிடும் போக்குக்கு அந்தத் திறமையினையும் அறிவினையும் பயன்படுத்திக்கொள்ள முயலுகின்றனர். எவரஸ்ட் உச்சி ஏறி கண்டவெற்றி அவ்விதமானதன்று. இயற்கையின் வடிவங்கள் எத்துணை எத்துணை எழிலுடன் உள்ளன என்பதனையும், அந்த வடிவத்தின் பேரளவின்முன்பு நின்று தன்னை ஒப்பிட்டுப்பார்த்துக்கொள்ளும்போது, மனிதன எத்தனை சிறிய உருவினன் என்பதனை உணர்ந்திடவும், அந்த உணர்ச்சி காரணமாக, இயற்கையினைப் போற்றிடவுமான ஒரு மனப்பாங்கு ஏற்படுகிறது. கட்டுக்கடங்காத ஆற்றுவெள்ளம் புரண்டோடக்காண்பவன், இயற்கையின் சீற்றத்தின் தன்மையை ஓரளவு உணர்ந்திடுகிறான்! அத்தகைய சீற்றத்தால் தாக்கப்பட்டால், தன்கதி என்ன ஆகும் என்பதனை எண்ணிப் பார்க்கும்போது, தனக்கென்று அமைந்துள்ள ஆற்றல எவ்வளவு சிறிய அளவினது என்று உணருகிறான், தன்னடக்கம் பெறுகிறான்; இயற்கையின் வல்லமையைக்கண்டு வியந்து நிற்கிறான்.

எவரெஸ்ட்டு உச்சிமீது நின்ற மாவீரர்கள் மனதிலே, வெற்றிக் களிப்பு கொந்தளித்திருக்கும்; ஐயமில்லை; ஆயினும் இயற்கையின் கோலம் கண்டதால், ஓர் வியப்பும் தோன்றியிருக்கும்.

எங்கெங்கோ நடமாடித் திரிகின்றீர்கள்! எதை எதையோ சாதித்து விட்டதாகக் கருதிக்கொண்டு இறுமாந்து போகிறீர்கள், நிமிர்ந்து நிற்கிறீர்கள்; என்னைக் காணுங்கள்! எளிதாக என்னை வந்து எவரும் காணமுடியாது! எத்தனை எத்தனையோ அரசுகள் அமைந்தன, அழிந்தன! எத்தனை எத்தனையோ கோலங்கள் தோன்றின, அழிந்தன! பெருநகர்கள் எழுந்தன, வெட்டவெளிகளாயின! இவை போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன, நான் இன்றுபோல் அன்றும், எவருக்கும் எட்டாத இடத்திலிருந்து கொண்டு எழிலைக் காட்டியபடி உள்ளேன்! காலம் என்னை முதுமையாக்கி விடவில்லை. காலத்தை வெல்லும் ஆற்றலுடன் உள்ளேன்! காணீர்!—என்றெல்லாம், எவரஸ்ட் உச்சியிலே உள்ள பனிப் பாறை ஒலியற்றதோர் முறையில் பேசக் கேட்டிருப்பர், வெற்றி பெற்ற அந்த மாவீரர்கள்!! அவர்களை வாழ்த்துகிறோம்.

❀

தம்பி

கங்காதீர்த்தம்

நெல்லுக்கும் பதருக்கும் உருவ அமைப்பிலே அதிக வித்தியாசம் தெரிவதில்லை; ஆனால் உழவர்கள் எளிதாக இரண்டையும் வெவ்வேருகப் பிரித்துவிடுகிருர்கள்; ஒவ்வொன்ருக எடுத்துப் பார்த்துப் பார்த்து அல்ல; முறத்திலே கொட்டி, காற்றடிக்கும் பக்கமாக நின்று 'தூற்றி' எடுப்பதன் மூலம்.

கானலுக்கும் நீருக்கும் தொலைவிலிருந்து பார்க்கும்போது வேறுபாடு தெரிவதில்லை; கானல், நீர்போலவே தோற்றமளிக்கிறது; அருகே சென்று பார்த்தால் கானல் என்று கண்டறிந்திட முடிகிறது.

சொல்லிலேகூடப் பதரும் உண்டு, நெல்லும் உண்டு; கானலும் உண்டு, நீரும் உண்டு; கண்டறிய வேண்டும். அதற்குக் காதுமட்டும் பயன்பட்டால் போதாது, கருத்து சுறுசுறுப்பாக வேலை செய்தபடி இருக்கவேண்டும்.

நெல் விளைவிக்க எடுத்துக்கொள்ளவேண்டி வரும் முயற்சி உழைப்புபோலவா சொல்லை விளைவித்திடத் தேவைப்படுகிறது. வெகு எளிதாக வண்டி வண்டியாக, அம்பாரம் அம்பாரமாகக் குவித்திட முடிகிறது, சொல்லை.

நெல்லுக்கும் பதருக்கும் உள்ள வேறுபாட்டினைக் கண்டறிந்து, பதரை அப்புறப் படுத்தினால் மட்டுமே, பயனுள்ள நெல்லைப் பெறமுடியும்; சொல்லுக்கும் அவ்விதமே.

பயனற்றதைச் சொல்லாதே என்கிருர் வள்ளுவர்; கேட்டனரா? பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ருர், கேட்டனரா? இல்லையே.

பயனற்றன பேசுவதிலேயும் தம்பி! இருவகை உண்டு. ஒன்று தெரியாமல் பயனற்றன பேசிவிடுவது; மற்ருென்று, தெரிந்து, திட்டமிட்டு, வேண்டுமென்றே, கேட்பவர்கள் மயக்க என்றே பயனற்றவைகளைப் பயனுள்ளவைபோலத் தோற்றம் கொள்ளுமபடிச் செய்து, பேசி வைப்பது; முன்னது அறியாமையின் விளைவு, மற்றது கயமையின் ஒருவகை.

மற்ருென்றும் தெரிந்திருக்குமே தம்பி! சீமான் கொடுக்கும் வேப்பெண்ணெய், தேன் போல் இனிக்கிறது என்று கூறவேண்டிய கொடுமையை ஏழைகள் சில வேளைகளில் தாங்கித் தொலைக்கவேண்டி நேரிட்டுவிடுகிறது. சீமான் என்று நான் குறிப்பிடுவது பணம் படைத்தவனை மட்டுமல்ல, பதவியால் உயர்ந்திருப்பவரும் ஒரு வகையில் சீமான்! அதிலும் இந்நாட்களில் பணம் படைத்தவன்கூட பதவிப்பித்தர்முன் கைகட்டி நிற்கவேண்டி இருக்கிறது-காரியம் சாதித்துக்கொள்ள.

பெரிய புள்ளியின் பேச்சுக்கு மறுபேச்சு பேசுவது கூடாது என்ற எண்ணத்தில், குமட்டல் கொடுத்திடுவதைக்கூட இனிப்பானதாக, ஏழை கூறிடவேண்டி நேரிட்டுவிடுகிறது; ஆனால் அந்த ஏழைக்கு உண்மை தெரியும்; நாக்கு மட்டுந்தான் வேறுவிதமாகப் பேசுகிறது; நெஞ்சம் உண்மையினை அறியும். நிலை காரணமாக, அந்தப் பேச்சு.

அதேபோலத்தான் பதவியில் உயர்ந்தவர்கள், பதர் கொடுத்து இது உயர்தரமான நெல் என்று கூறிடும்போது, ஏழையால் மறுத்துப் பேசிட முடிவதில்லை ஆனால் வாய்



மட்டுந்தான் மூடிக்கிடக்கிறது; மனம்? தூங்குவதில்லை! உண்மையை உணராமலிருப்பதில்லை.

திட்டமிட்டு, பயனற்றவைகளைக் கலந்தளிக்கும் முறை வணிகத்துறையிலே மிகுந்துவிட்டிருக்கிறது என்று அறிந்தோரும் அனுபவித்து அல்லற்பட்டோரும் கூறுகின்றனர்.

ஒருவர் கூறினர் என்னிடம் ஒரு ஊரில், அரிசியுடன் கலப்பதற்காக வெள்ளைநிறக் கூழாங்கற்களை அரிசிபோன்ற வடிவிலேயே உடைத்துத்தந்திட ஒரு சிறு யந்திரமே வைத்திருக்கிருர்களாம்! அரிசி சோருக ஆனபிறகே, இந்தக் கல்லரிசியைக் கண்டுபிடிக்க முடியுமாம்! வேகாதல்லவா, கல்லாலான அரிசி! கண் மட்டும் போதவில்லையல்லவா, அரிசியுடன் கலந்துள்ள —கலந்துள்ளதா!! கலக்கப்பட்டுள்ள!!—கல் அரிசியைக் கண்டுபிடிக்க!

சீவல் பாக்குடன் ஏதோ ஓர்விதமான கொட்டையை (காட்டுப்பயிர்) சீவிக் கலந்துவிடுவதாகவும், தழையை வேகவைத்துக் கருநிறமாக்கிப் பொடி செய்து தேயிலைத் தூளுடன் கலந்துவிடுவதாகவும், ஏலத்துடன் கருநிறமான மெழுகுத் துண்டுகளைக் கலந்துவிடுவதாகவும் கூறுகிருர்கள்.

இவை, குறுக்கு வழியில், தவருன வழியில் ஆதாயம் தேட நடத்தப்பட்டு வரும அக்ரமங்கள். சட்டம் இருககிறது. ஆனுல் அதனுல் மட்டும் எவ்வளவு எனறு வேலைசெய்ய முடியும! அலுத்துப்போய் விடுகிறது! தூங்கிவிடுகிறது! மயக்கமடையச்செய்தும் விடுகிருர்கள்! இன்று நேற்று! நெடுங்காலமாகவே.

கிரேக்க நாட்டுக் கவிஞர் பெருமகன், ஹோமர் கூறினர்,

> ஓடிவிடுகிறது ஓய்யார அனியாயம்!
>
> மாந்தரை அலைக்கழித்து மானுய்ப் பறக்கிறது.
>
> அனியாயம் விளைவித்த புண்ணுக்கு மருந்தளிக்க புறப்பட்டுப் போகின்ருள் தொழுகை எனும் பெண்ணுள்! தொல்தேவர் குடி பிறந்தாள்! ஆயினும் என்ன?
>
> நங்கை அவள் நொண்டி. நகர்கின்ருள்; நைந்த கண்ணுள் முகமது சுண்டி.

என்று பாடினர்.

அனியாயம் இழைக்கப்படும்போது, தேவனைத் தொழுது பரிகாரம் தேடுகின்றனரல்லவா—அது எப்படிப் பயனற்றுப் போகிறது என்பதனைக் காட்டுகிருர், கிரேக்கக் கவிஞர்.

> அனியாயம் மானுகப் பறக்கிறதாம்!
>
> அனியாயத்தை வீழ்த்தக் கிளம்பும் தொழுகை எனும் பெண்ணுக்கு, கண் குருடாம், கால் நொண்டியாம்!

இப்போது, அனியாயத்தை வீழ்த்தக் கிளம்பும் சட்டம், இதைவிட மோசமான நிலையில் அல்லவா இருக்கிறது.

சரி, அண்ணு! கலப்படத்தால் விளையும் கேடு பற்றி எதற்காக இப்போது கூறுகிருய்? எந்தப்பண்டம் வாங்கி ஏமாந்துவிட்டாய்? என்று கேட்கிருயா, தம்பி! நான் கூறவந்தது, சொல்லிலே கலக்கப்பட்டுவிடும் பயனற்றன பற்றி; இடையிலே பொருளிலே கலக்கப்பட்டுவிடும் பயனற்றவை பற்றியும் குறிப்பிட்டேன்,

தம்பி! வடிவத்திலே ஒத்தது போலவே இருப்பினும் ஏன் பதர், கானல், இவைகளைப் பயனற்றன என்கிருேம்.

பொருளற்றன, பயனற்றன; அவ்வளவே!

பதருக்குள்ளே, பொருள் இல்லை; நெல்லுக்குள் அரிசி எனும் பொருள் இருப்பது போல! பொருள் இல்லை; ஆகவே பயன் இல்லை!!

கானலில், நீர் இல்லை, பருகிட! பொருள் இல்லை, பயன் இல்லை!

சொல்லிலேயும் அவ்விதமே, பயனுள்ள சொல்லில் பொருளிருக்கும், பொருளுள்ள சொல்லால் பயன் கிடைக்கும்; பொருளற்ற சொல் பயனற்றுப் போகும்.

நெல்லும் பதரும் ஒரே பயிரிலே விளைவது போலவே, பயனுள்ள சொல்லும் பயனற்ற சொல்லும், பேச்சிலிருந்துதான் முளைக்கின்றன.

பதர் நீக்கி நெல் கொள்வதுபோல, பேசப்படுவனவற்றில் பயனற்றதை நீக்கிவிட்டுப் பயனுள்ளதைக் கொள்ளவேண்டும்.

இது மிகக் கடினமா! என்ன அண்ணு! உனக்கு இளையவன்—வயதில்தானே!! பதர் நீக்கி நெல்லைக் கொள்ளவேண்டும் என்பதனைக் கூடவா எனக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று கேட்பாயோ, தம்பி! கேட்டாலும் கேட்டுவிடுவாய்; ஆகவே விரைந்து கூறிவிடுகிறேன், நான் குறிப்பிட்டேனே, சீமான் கொடுதத வேப்பெண்ணெய்—அதனை நினைவுபடுத்திக் கொள். பயனற்றன—பயனளிப்பன என்று சொல்லைப் பிரித்துவிடலாம், நல்லன கொண்டு அல்லன தள்ளலாம்—நம்மை ஒத்தவர்கள் பேசக் கேட்டால்; ஆனுல் பேசுபவர், பெரிய புள்ளி—பெரிய பதவியில் உள்ளவர் என்ருல் முடியுமா; எளிதாக! முடியும், என்னுல்! என்கிருயா!! சரி, தம்பி! நீ எதனையும் துருவித் துருவிப் பார்த்திடவும், உண்மையைஎடுத்துரைக்கவும் தேவைப்படும் இயல்பினைக் கொண்டிருக்கிருய்; உன்னுல் முடிகிறது. ஆனுல் எல்லோராலும் முடியுமா—எத்தனையோ தொல்லைகளைத் தாங்கித தாங்கி வாழ்க்கையே வளைந்துபோயுள்ள நிலையில் உள்ளவர்களால் முடியுமா—பதவி

யில் உயர்ந்தவர்கள் பேசும் பேச்சிலே, தரம், வகை பிரித்துக் காட்டி, அவர்களின் கோபம் கிளம்பித் தாக்கினால் அதனுடைய வேகத்தைத் தாங்கிக் கொள்ளும் 'உள்ள உரம்' எல்லோருக்குமா ஏற்பட்டுவிடும்? முடியாதல்லவா! அவர்கள் நெல்லுக்குப் பதிலாகப் பதர் கிடைக்கப் பெற்று, பதர் என்று வெளியே கூறிடவும் முடியாமல், அதனைச்சுமந்தும் செல்லவேண்டி நேரிட்டுவிடுகிறது. காமராஜரின் சுற்றுப் பயணப் பேச்சைக் கேட்டவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டதாகக் கூறுகிறார்கள்; இதழ்களிலே நான் பார்த்த அளவில், எனக்கும் அதுபோலத்தான் தோன்றுகிறது.

தம்பி! மற்றொன்றுஉளது முக்கியமானது; பேச்சு பொருளுள்ளதாக, பயனுள்ளதாக இருக்கவேண்டும் என்பதுடன், சொல்லுக்கும் செயலுக்கும் பொறுத்தமிருக்கவேண்டும்; சொல் சுவைத்து, செயல் கசப்பளித்தால், பயன் என்ன?

வாளது கையில்கொண்டு
வருபவன் சிரம் அறுத்து
வாகையைச் சூடிநானே
வந்திடுவேன், உறுதி உறுதியாமே!

என்று உரத்த குரலிலே முழக்கம் எழுப்பிவிட்டு, களம் நோக்கிச் செல்லாமல், அடுக்களை சென்று பதுங்கினால், முழக்கத்தால் பயன் என்ன கிடைத்திடும்!

செந்தமிழின் சுவையினைச் சேர்த்து, செல்லரித்துப்போன ஏடுகளிலேஉள்ள கதைகளுக்குப் புது வடிவம் கொடுத்து, 'காலட்சேபம்' செய்து கனதனவான் வாழ்க்கையைப் பெற்றிருப்பவர்கள் சிலரை அறிந்திருப்பாயே, தம்பி! அப்படிப்பட்டவரில் ஒருவர்–பெயரா? ஏதாவது வைத்துக்கொள்ளேன்!—தேனமிர்தானந்தர்! —பரதன் பாதுகை சுமந்ததுபற்றி உருக்கமாகக் காலட்சேபம் செய்துவிட்டு, அன்றிரவு, அண்ணனுக்குச் சேரவேண்டிய சொத்தினை ஏமாற்றிப் பறித்துக் கொள்வதற்காக, ஆள்வைத்து அவனை மண்டையில் அடித்து, மூளை குழம்பிப்போகும்படிச்செய்து, 'பித்தர் விடுதி'யில் சேர்த்துவிட்ட பிள்ளைப் பெருமாள் எனும் சீமான் வீட்டில் விருந்துண்ணச்செல்வதும், கண்ணப்ப நாயனார் கதையை, கேட்பவர் கண்களில் நீர் வழியும் விதமாகக் 'காலட்சேபம்' செய்துவிட்டு, இளையாளுக்காக மூத்தாளைத் தாக்கி, அதன் காரணமாக அவளுடைய கண்ணுக்குச் சேதம் உண்டாக்கி, அது மாரியம்மன் செய்தது என்று மற்றவர்களை நம்பும்படிச் செய்துவிட்ட பெரியசாமி மாளிகையில் விருந்துண்ணச் செல்வதும், வள்ளலார் வகுத்தவழிபற்றி அழகொழுகப் பேசிவிட்டு, பட்டாளத்துக்கு ஆட்டுக்கறி 'காண்ட்ராக்ட்' எடுத்து ஆறு இலட்சம் ஆதாயம் பெற்ற அருமைநாயகம் பங்களாவில் விருந்து சாப்பிடச் செல்வதும், காரைக்காலம்மையார்பற்றிக் காலட்சேபம் செய்துவிட்டு, கணவனிடம் மல்லுக்கு நின்று மாதம் ஆயிரம் ஜீவனாம்சம் பெற்றுக்கொண்ட மரகதம் வீட்டிலே சிற்றுண்டி சாப்பிடச் செல்வதும், எம்மதமும் சம்மதமே என்ற சமரசபோதம் அளித்துவிட்டு, கோயில்யானைக்கு நாமம், வடகலையா, தென்கலையா என்ற பிரச்சினையில் முன்னாலே நின்று, எதிர்த்தரப்பினரை ஆள்வைத்து மண்டையை உடைத்த தர்மகர்த்தா தனபாலர் வீட்டிலே விருந்துக்குச் செல்வதும், ஆலயத் திருப்பணி பற்றி அழகாகப் பேசிவிட்டு, அம்பாளின் ஆபரணங்களைத் தன்னுடைய 'அன்னத்துக்கு' என்று ஆக்கிக்கொண்ட கோயிற் பெருச்சாளி கோதண்டபாணி வீட்டிலே 'ஜாகை' வைத்துக்கொள்வதும், பொறுத்தம் என்று புராணத்தைப் போற்றுபவர்களேகூட ஒப்புக்கொள்வார்களா! சொல்லுக்கும்செயலுக்கும் பொறுத்தமில்லையே; எதெது தவறு, பாபம் என்று காலட்சேபத்தில் கூறுகிறாரோ, அந்தத் தவறுகளை, பாபங்களைச் செய்து, பணம் திரட்டிக்கொண்டுள்ள பாதகர்களின் விருந்தினராகச் செல்லலாமா? எப்படி மனம் ஒப்பிச் செல்கிறார்? இவர் அப்படிப்பட்டவர்களின் இல்லங்களில் சென்று விருந்துண்டால், ஊரார் என்ன எண்ணிக் கொள்வார்கள்? எத்தனையோ பயல்கள், என்னை அக்ரமக்காரன், அனியாயம் செய்தவன் என்று பேசினார்கள்! இப்போது என்ன சொல்கிறார்கள். அறநெறிபற்றியும் அன்புவழிபற்றியும்; அரிஅரன் அவர் மகன் ஆகியோரின் மகிமைபற்றியும் அழகாகக் காலட்சேபம் நடாத்தும் தேனமிர்தானந்தரே எனது இல்லத்திற்கு வந்திருந்தார், விருந்துண்டார், வாழ்த்தினார்; காணிக்கையை ஏற்றுக்கொண்டார்! என்று அவர்கள் பேசமாட்டார்களா! உள்ளபடி அந்தக் காலட்சேபம் செய்பவருக்கு. அக்ரமத்திலே வெறுப்பு என்றால், அக்ரமக்காரர் வீடுசெல்ல மனம் இடம்கொடுக்குமா! சென்றார் என்றால், அவரைப்பற்றி என்ன தம்பி! எண்ணிக்

தாயின் தியாகம் மிகப் பெரியது!
குழந்தைக்காக
தன் கண்ணை விளக்காக்குகிறாள்!
கையைத் தொட்டிலாக்குகிறாள்!
ரத்தத்தைப் பாலாக்குகிறாள்!
ஆனால் இதில்வரும் தாய் இவைகளைவிட மிகச்சிறந்த ஒரு தியாகத்தைச் செய்கிறாள்……………!
"தும்பைப் பூ"
தென்னரசு
எழுதும்
தொடர் கதை
விரைவில் ஆரம்பமாகிறது.
"காஞ்சி"யில்

கொள்வாய்? அவருடைய 'காலட்சேபம்'பற்றி எந்த விதமான மதிப்புப்போடுவாய்?

சூறாவளிச் சுற்றுப் பயணக்காரர் — காமராஜர்— 3000 மைல்களாமே—அவ்வளவு தொலைவுசுற்றி, பேசினாரே, ஏழைக்காக, சோஷியலிசத்துக்காக — தம்பி! அந்தப் பேச்சிலே பதர் எவ்வளவு என்பது ஒருபுறம் இருக்க, அந்தப் பேச்சுப் பேசினவரை வாழ்த்தி வரவேற்றவர்கள், செலவு செய்து விழா எடுத்தவர்கள், சூழ நின்று சூடம் கொளுத்தியவர்கள், மாளிகை அழைத்துச் சென்று விருந்து நடத்தியவர்கள், இவர்கள் யார்? சோஷியலிசத்துக்கும் இவர்களுக்கும் என்ன சம்பந்தம்? ஏழை இவர்களைப்பற்றி என்ன எண்ணுகிறான்? என்பவைபற்றி எண்ணிப்பார்த்தால் தம்பி! நான் குறிப்பிட்ட காலட்சேபக்காரர் உவமையின் பொருள் விளங்கும்.

ஒரு ஊரில் பஸ் முதலாளி, மற்றோர் இடத்தில் ஆலை அரசர், இன்னோரிடத்தில் வட்டிக் கடைக்காரர், வேறோரிடத்தில் மிட்டா, மற்றுமோரிடத்தில் புது பர்மிட், இப்படிப்பட்டவர்கள் இல்லங்களிலா, அல்லது ஆலைத் தொழிலாளி, கதர்க் கடையில் கணக்கெழுதுபவர், போன்ற எளியோர் குடில்களிலா, எங்கு அழைத்துச் செல்லப்பட்டார், சோஷியலிசம் பேசியவர், என்பதைக் கேட்டறிந்தால், தம்பி! சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தம் இல்லாததை, முரண்பாடே இருப்பதை அறிந்துகொள்ளலாம். அறிந்து கொண்டுள்ளனர் மக்கள்.

> "ஏழைபங்காளர் காமராஜர் என்பது இப்போது தெரிகிறதல்லவா?"

மண்டலம் கேட்கிறார் இதுபோல வறண்ட தலைத் தோழரைப் பார்த்து.

> "மகராஜன்! ஏழைக்காகத்தான் ஆட்சி என்கிறார். காது குளிரக் கேட்டேன்" என்று அந்த ஏழை கூறுகிறான்; உடனே மண்டலம், சரி! இந்த ஓட்டு நமக்கு, காங்கிரசுக்கு என்று எண்ணிப் பூரித்து, வேறு ஆளைப் பார்க்கச் செல்கிறார். ஏழைக்காகப் பேசிய காமராஜர் ஏறிச் செல்லும் படகு மோடார் பறந்து வருகிறது; பாதையில் நிற்காதே, போ! அந்தப் பக்கம்! என்று விரட்டுகிறார் போலீஸ்காரர்.

> "எங்கே செல்கிறார் காமராஜர்?"

என்று கேட்கிறான் ஏழை, போலீஸ்காரரிடம்.

> கட்டாயம் தெரிந்துகொண்டாக வேண்டுமோ! ஏனாம்! பேட்டி பார்க்கவோ!

என்று கேலி பேசித் துரத்துகிறார். காலை முதல் கால் கடுக்கச் சேவகம் பார்த்த அலுப்பினால், கான்ஸ்டபிள்.

மற்றோர் ஏழை பதில் கூறுகிறான்.

> "ஆலை முதலாளி அய்யம்பெருமாள் அரண்மனைக்கு"

இது கேட்ட ஏழையின் உச்சி குளிருமா! உள்ளம்பதறுகிறது.

> அய்யம்பெருமாள் அரண்மனைககா!
> விருந்து சாப்பிட அந்த இடமா!
> நூல் கட்டுகளைக் கள்ளமார்க்கட்டில் விற்பவனாயிற்றே.
>
> நெசவாளிகளின் குடும்பம் எத்தனையோ நாசமாகக் காரணமாக இருந்தவனாயிற்றே.
>
> கணக்கு, மூன்று நாலு தினுசாச்சே அவனிடம், அவன் அரண்மனைக்கா செல்கிறார் காமராஜர்.
>
> அவன் போன்றவர்களின் ஆதிக்கத்தை ஒழித்தால்தானே, சோஷியலிசம் மலரும்.
>
> சோஷியலிசம் மலர்ந்தால்தானே ஏழைககு வாழ்வு.
>
> ஏழையின் வாழ்வைக் குலைக்கும் எத்தன் அரண்மனைக்கு இவர் போகலாமா?
>
> இவர் அங்கு போனால் பிறகு சோஷியலிசம் பெற எப்படி வேலை செய்ய முடியும்?
>
> பேசுவது சோஷியலிசம், குலவுவது முதலாளியிடமா!
>
> எங்கள் காதுக்காக சோஷியலிசப் பேச்சு இவர் தங்குமிடம் முதலாளி மாளிகை!

இவ்விதமெல்லாம் தம்பி! அந்த ஏழை கேட்க முடியாது-மனதிலே இவை கொந்தளித்தபடி இருக்கும். மண்டலத்துக்கு இது தெரியாது!

சோஷியலிசம் ஏன் தேவைப்படுகிறது? என்பது குறித்தும், சோஷியலிசம் என்றால் என்ன? என்பது பற்றியும், சோஷியலிசத்தை எப்படிக் காண்பது என்பதுபற்றியும், சோஷியலிச தத்துவம் அறிந்தவர்கள், சோஷியலிசத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதிலே வெற்றி கண்டவர்கள், கூறியுள்ளனர்.

காமாராஜர், இந்தக் கருத்துகளை அல்ல—சோஷியலிசம்பற்றிக் காங்கிரஸ் கொண்டுள்ள கருத்தைத்தான் கூறுகிறார்.

இது அல்லவே சோஷியலிசம் என்று கூறுகின்றனர்; சோஷியலிச தத்துவத்துக்கும் நீங்கள் சொல்லுவதற்கும் பொருந்தவில்லையே என்று விவரமறிந்தவர்கள் கூறுகின்றனர்; அதுபற்றி எமக்குக் கவலையில்லை; தத்துவம் பேசுபவர்கள் அல்ல நாங்கள்; நாங்கள் கூறும் சோஷியலிசம் இப்படித்தான்! போ! போ!!— என்று கூறிவிடுகிறார் காமராஜர்.

மண்டலத்தைக் கேட்டால், இது ஒரு மாதிரி சோஷியலிசம் என்கிறார்.

சோஷியலிசம் மாதிரிதான் இது என்கிறார் வேறோர் காங்கிரஸ்காரர்

தம்பி! இப்போது புனிதப் பயணத்தின் புகழ் பாடி, நம்மோடு இருந்தபோது. சோஷியலிசம் மாதிரி என்று காங்கிரஸ் கட்சி ஆவடியில் திட்டம் கூறினபோது முழக்கமிட்டது என் காதிலே இப்போதுகூட ஒலித்துக் கொண்டிருக்கிறது.

சோஷியலிசம் மாதிரி!

குதிரை மாதிரி!

குதிரை மாதிரி என்றால் என்னபொருள்?

கழுதை! என்று பொருள்.

அப்படிப் பேசிவிட்டு இப்போது இப்படி இருக்கலாமா என்று என்னைக் கேட்காதே தம்பி! பயில்வான் போல இருந்தான் இப்போது எலும்புருவமாகிவிட்டானே ஏன் என்று கேட்டால், என்ன பதில் கூறுவது; கெட்ட கிருமிகள் கொட்டிவிட்டன என்றுதானே, அதுபோல. அது கிடக்கட்டும்; காமராஜர். பேசிடும் சோஷியலிசம் பற்றிப் பார்ப்போம். அவர் பேசுவது சோஷியலிசம் அல்ல! பதர்; நெல் அல்ல!! — ஏன்? பொருள் இல்லை; பயன் இல்லை.

இதனை எல்லோராலும் உணர்ந்துகொள்ள முடிந்தாலும் எடுத்துக் கூறிடும் இயல்பு அனைவருக்கும் இருந்திடாது; அந்த இயல்பு இருந்திடினும், அச்சம, தயை தாட்சணியமின்றி அதனை எடுத்துக்கூறுவோரின் தொகை அதிகம் இருக்கமுடியாது.

ஏழைக்காகப் பரிந்து பேசுவது,

ஏழைக்கு இயன்ற அளவு உதவி செய்வது,

ஏழையும் ஓரளவு நிம்மதியான வாழ்வுபெற வழி காண்பது,

ஏழைக்குத் தொழிலும் வருவாயும் கிடைக்கச் செய்வது,

ஏழையை ஏழை என்பதற்காக இழிவாக நடத்தாமலிருப்பது,

ஏழைக்கு, குடி இருக்க வசதி, படிப்பு வசதி, மருத்துவ வசதி தேடிக்கொடுப்பது,

இவைகளைச் செய்துவிட்டால போதும், அதுதான் சோஷியலிசம் என்று எண்ணிக்கொள்ளச் சொல்லுகிறது, காங்கிரஸ் கட்சி.

காய்ச்சல் காரணமாக வாய்க்கசப்பு கொண்டவன் நாவில், ஒருதுளி தேன் தடவிவிடுவது போன்றது இது.

தானதருமம் செய்வது, சத்திரம் சாவடி கட்டுவது. கோயில் குளம் அமைப்பது. கல்விக்கூடம் கலியாண மண்டபம் கட்டுவது, இவைகளைச் செய்தால போதும் அதுதான் சோஷியலிசம் என்று எண்ணிக் கொள்ளச் சொல்கிறார்கள்.

இந்த உதவிகளை—தருமங்களை—தனிப்பட்ட 'முதலாளிகளை'ச் செய்யச் சொல்லி வற்புறுத்துவதும், முதலாளிகளிடம் வரியாகவும் நன்கொடையாகவும் பணம் பெற்று சர்க்கார் இந்த உதவிகளைச் செய்வதும் போதும், சோஷியலிசம் அதுதான் என்று காமராஜரைச் சொல்ல வைத்திருக்கிறது காங்கிரஸ் கட்சி.

ஆனால் சோஷியலிசம் என்பதற்கு தரப்பட்டிருக்கும் விளக்கம் வேறு; அதனைப் பார்க்கும்போது மன எழுச்சியே ஏற்படும்.

உடலிலே படிந்துள்ள சேற்றினைக் கழுவிக்கொள்ள ஒரு பானைத் தண்ணீர் தரச் சொல்லி 'உபதேசம்' செய்வதை சோஷியலிசம் என்று காங்கிரஸ் கூறுகிறது சோஷியலிசம் உடலிலே சேறு படியாத நிலையை ஏற்படுத்த என்ன வழி யாது முறை என்பதை எடுத்துக் காட்டும் திட்டமாகும்.

"கொடு!" என்று முதலாளிகளிடமும், "பெறு" என்று ஏழையிடமும் கூறுவதும், "அவ்வளவு இருக்கிறதே. கொஞ்சம் கொடு!" என்று பணக்காரரிடமும், "இவ்வளவு கிடைத்ததே. திருப்திப்படு" என்று ஏழையிடமும் பேசி, இரு வர்க்கத்துக்கும் இடையே நின்று, இருவருக்கும் இனிப்பாகப் பேசி வருவதை, சோஷியலிசம் என்று காங்கிரஸ் கட்சி கருதிக் கொள்கிறது; கருதிக்கொள்ளச் சொல்லுகிறது சோஷியலிசத் தத்துவமும், முறையும் வேறாக இருக்கிறதே என்று கூறினாலோ, கோபம் பொத்துக்கொண்டு வருகிறது—புரியாததால் அல்ல—புரிவதால்!!—எங்கள் சோஷியலிசம் இதுதான் என்று கூறிவிடுகிறார்கள். இதுபற்றிப் பிறகு எழுதுகிறேன்.

புரோகிதன், நம் வீட்டுக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துவரச்சொல்லி, செம்பிலே நிரப்பி, ஒரு கொத்து மாவிலையைச் செருகி, இதிலே இருப்பது, கங்கா, யமுனா, சரஸ்வதி ஆகிய நதிகளின் புண்ணிய தீர்த்தம் என்று சொல்லும்போது இது ஏன் இப்படி ஒரு அண்டப்புளுகு! என்று கேட்கிறார்களா—நன்றாகத் தெரியும், நம்முடைய வீட்டுக் கிணற்றுத் தண்ணீர் தானே என்பது—இருந்தாலும் புரோகிதர் பொய்யுரைக்கும்போது மறுப்பதில்லையே!! ஆம்! என்று ஒப்புக்கொள்கிறார்களல்லவா? அதுபோல நெடுங்காலமாக—இங்குமட்டும் அல்ல—நாகரீக அரசியல் வளர்ந்த எல்லா நாடுகளிலும்—சுவு இரக்கம், பரிவு பச்சாதாபம், தானம் தருமம் என்ற பண்புகள் இருந்து வந்தனவே, அவைகளையே எடுத்து. தமது கட்சி முத்திரையிட்டு, இது தான் சோஷியலிசம் என்கிறது காங்கிரஸ் கட்சி. கிணற்றுத் தண்ணீர் கங்கா தீர்த்தம ஆகிவிடுகிறது!!

அண்ணன்,

அண்ணாதுரை

என்னை மன்னியும்

சபரி

துறைமுகத்தை விட்டுகப்பல் கிளம்பிவிட்டது. கப்பலின் மேல் தளத்தில் நின்றுகொண்டு என் அத்தான் கையை ஆட்டிக்கொண்டிருந்தார் ஆறு மாதம் என் அத்தானை பிரிந்து இருக்கவேண்டும். அவர் மலேயாவில்–நான் இந்தியாவில். என் கணகளில் நீர் துளிர்த்து. கப்பலை மறைத்தது. சப்பல், கடலில் நிம்மதியாக சென்றுகொண்டிருந்தது. ஆனல் என் மனக் கடலிலோ......!

நானும். ஜானும் காரில் ஏறி வீட்டை வந்தடைந்தோம். என் மனம் பின்னேக்கி சென்றது நானும் என் அத்தான்-ராஜாவின் தாயாரும் தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு கிராமத்தில் இருந்தவர்கள். அங்குள்ள நிலபுலன்களை பார்த்துக்கொண்டிருந்தோம். என் தாய், தந்தையரை இழந்தவுடன் நான் என் அத்தையுடன்தான் கிராமத்தில் இருந்தேன் அத்தான் சென்னையில் தங்கி வியாபாரத்தை கவனித்துக்கொண்டிருந்தார் ஜான்—என் அத்தானுக்கு ஒன்றுவிட்ட தம்பி முறையாக வேண்டும். அவர் மலேயாவில் தங்கி வியாபாரத்தை கவனித்து வந்தார். அவர் சென்னை வந்து ஆறு மாதங்கள் ஆகின்றன. அதாவது, நானும் அத்தையும் கிராமத்தில் உள்ள நிலங்களை விற்றுவிட்டு சென்னை வந்ததும் அப்போதுதான். சென்னை வந்ததும்எனக்கும் ஒரு புது வாழ்க்கை. புது பெயரும்கூட வள்ளி–லில்லியானேன்! என்னதான் மதம் மாறினலும் மனமும் மாறிவிடுமா. எனக்கு வரவர இந்த சென்னை வாழ்க்கை சலித்துவிட்டது. இந்த நாகரீகம் இந்த வாழ்க்கை முறை ஒன்றும் எனக்கு பிடிக்கவில்லை. நான் இருப்பது பெரிய பங்களா. நிறைய வேலையாட்கள். உணவு, உடை எல்லாம் மேல்நாட்டு வழக்கப்படிதான்.

என் அத்தானுக்கும், இந்த நாகரீகத்தில் மோகம்தான். காரில் எங்காவது வெளியே போகும்போதுகூட என் அத்தான் கார் ஓட்ட நான் நடுவில் அமர்ந்து. ஜான் மற்றொரு பககம் அமர்ந்துகொள்வார். எனக்கு இதெல்லாம் பிடிப்பதில்லை நாகரீகம் என்று நினைத்துக்கொண்டு வாழ்க்கையின் வரம்பை மீறிவிடக்கூடாது. பிறகு ஒழுக்கம், பண்பெல்லாம் எங்கோ மறைந்துவிடும். எனக்கு ஜானைக் கண்டால் பிடிப்பதில்லை. அவன் பார்வையும் பேச்சும் எனக்கு கட்டோடு பிடிப்பதிலலை அவன் என்னுடன் பழகும் விதம்-அதை நாகரீகம என்று அவனும் சொல்வான, என் அத்தானும் ஏற்றுக்கொள்வார். என் மனத்திற்குதானே தெரியும் அதன் பின்னல் இருக்கும் பயங்கரம!

நம் பெரியவர்கள் தெரியாமலா, சில கட்டுப்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் ஏற்படுத்தினர்கள், வாழ்க்கையில். என்னதான் அண்ணன, தம்பி, அக்காள், தங்கை என்று முறை இருந்தாலும் அவர்கள் கட்டுப்பாட்டிற்குள்தான் இருக்கவேண்டும். அதை விடுத்து நாகரீகம் என்று நினைத்துக்கொண்டு, ஒருவரோடு ஒருவர் நெருங்கிப் பழகினல் அங்கே கட்டுப்பாடு இருக்காது. அண்ணன், தங்கை, அக்காள் எனும உறவு முறை இருக்காது. ஒரு ஆண் பெண்: என்ற நிலைதான் மீதம் இருக்கும் பிறகு மனம் கெடுவதற்கு ஏதுவாகும் உறவு முறைகள் எனும் ஒரு கட்டுப்பாட்டிற்கு மீறி நாம் பழகினல் எண்ணங்கள் எவ்வழியும் செல்லும்! பிறகு நமக்கும் மிருகங்களுககும என்ன வேறுபாடு இருக்க முடியும்!!

என்னுடன் ஜான் பழகும் விதத்தை, எத்தனையோ தடவை என அததானிடம் சொல்லியும், அவர் அதை புரிந்துகொள்ளவில்லை, அவருக்கு வெள்ளை மனம். ஆனல் என் மனம் கறுப்பாக மாறிவிடக்கூடாதே—ஜானைப்போல்.

இன்றுகூட அவன் என்னை கடற்கரைக்கு அழைத்தான. நான் அவனுடன் சென்றிருக்கக் கூடாதுதான். அவன் நெருப்பை அல்லவா கக்கினன்.

“லில்லி, உண்மையைச் சொன்னல் நான் உன்னைக் காதலிக்கிறேன். ஆனல் இது ராஜாவின் காதலைப்போல் போலி இல்லை.”

“ஜான் என்ன உளருகிருய்! அண்ணனின் காதலியைத் — திருமணம் செய்துகொள்ளப் போகிறவளைப் பார்தது. இதைக் கேட்க உனக்கு எப்படி மனம் வந்தது! உனக்கு மனசாட்சி என்று ஒன்று இருக்கிறதா?

“லில்லி, அண்ணன் காதலிக்கிருன் என்று என் மனத்திடம் சொல்லச் சொல்கிருயா? மனம் என்று ஒன்று இருப்பதால் பல எண்ணங்கள எழத்தான் செய்யும். மனத்தில் ஏற்படும் எண்ணங்களை வெளிப்படையாகச் சொல்கிறேன் நான். என்னைப் போன்றவர்கள், துட்டர்கள் என்று தூற்றப்படுகிருர்கள். மனதில் ஏற்படும் விகார எண்ணங்களை, மறைத்து பெரிய மனிதன் வேடம் போட்டு, சமயம் வரும்போது அதை நிறைவேற்றிக்கொள்பவன நல்லவன் ஆகிருன்—அந்த விஷயம் தெரியாதவர்களுக்கு மட்டும், அவனைப்பற்றி தெரிந்தவர்களுக்கு — அதாவது குறிப்பிட்ட ஒரு சிலருக்கு - அந்த விஷயத்தில் அவனுடன் ஈடுபட்டவர்களுக்கு மட்டும் அவனும் துட்டனுகிருன்.

ஏற்படும் விகார எண்ணங்களை மறைத்துவைத்திருப்பவன் — வெளியிடாமல் இருக்கிறவன் நல்லவன் ஆகிருன். ஆனல் அவனே ஒருசாரார்ருக்கு ஏமாளியாகிருன். இதுதான் உலகம். ஆக தீய எண்ணங்கள் மனிதனுக பிறந்த எவனுக்கும் ஏற்படுவதுதான், இதற்கு விதிவிலக்கு மிகமிகச் சிலர்.

விகார எண்ணங்களை வெளியிடுபவன் தீயவனுகிருன்—வெளியிடாதவன் தூயவன் ஆகிருன்—உலகத்தின் முன்!

"ஜான் நீ பேசும் வேதாந்தம் விசித்திரமாக இருக்கிறது. இது உனக்கும் உன்போன்றவர்களுக்கும் வேண்டுமானுல் பொருந்தலாம். அல்லது நீ செய்யும் தீய செயலுக்கு உன் மனசாட்சியிடம் இருந்து எழுகிறதே கேள்வி, அதற்கு நீ சொல்லிக்கொள்ளும் பரிதாபமான, சமாதானமாக இருக்கலாம். ஆனுல் இது உலகத்திற்கு ஒவ்வாது."

வீட்டை வந்தடைந்ததும் நான் கட்டிலில் படுத்துக்கொண்டு கதறி கதறி அழுதேன். நாகரீக மோகத்தின் உச்சம் ஜானை எவ்வளவு பேசவைத்தது என்று நினைத்து அழுதுகொண்டிருந்தேன். நான் இப்போது அவனிடம் பேசுவதையும் வெளியே போவதையும் மிகவும் குறைத்துக் கொண்டேன். இனி என்ன பயன். அவன் திருந்தவா போகிருன்.

தினமும், அவன் என்னிடம் முன்பு சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிருன். அத்துடன் அவன்நிற்கவில்லை. "ராஜா சென்னை வரும்போது வேருெரு பெண்ணுடன், வந்து கப்பலில் இறங்கப்போகிருன் பார். மலேயாவைப் பற்றி, எனக்குத் தெரியும். ராஜாவைப் பற்றியும் நானறிவேன். சென்னையைவிட மிக, மிக நாகரீகமான நாட்டிற்கு போயிருக்கிருன். அவன் நாகரீக மோகமும் உனக்குத் தெரியும்.

வீட்டில் அதிக கட்டுப்பாட்டுடன் வளரும் குழந்தைகள், பிறகு வெளி உலகத்தை காணும்போது மிகவும் உணர்ச்சி வசப்பட்டு கெட்டுப் போவார்கள் எதிலும் ஒரு அளவு வேண்டும்—கட்டுப்பாட்டில்கூட!

கட்டுப்பாட்டில் வளர்ந்த அந்த 'குழந்தை' எதிலும் கட்டுப்பாடே இல்லாத நாகரீக நகருககு சென்றிருககிறது அங்கிருக்கும் இரவு வடுதிகளும், இன்ப கேளிக்கை நடனங்களும் அவனை மாறறிவிடும்.

வெளியூர்காரனைதான், கடைக்காரன் வருந்தி வருந்தி அழைப்பான். பொருள்களைப்பற்றி சொல்வான. ஏனென்ருல் உள்ளூர்க்காரன் அதை அறிவான் வெளியூாகாரனிடமதான் சிறிது பணம் சம்பாதிக்க முடியும என்கின்ற நம்பிக்கை கடைக்காரனுககு—உண்மையும்கூட. உள்ளூர்காரனும அந்த வியாபாரத்தைப் பார்தது ரசித்துவிடடுத்தான போவான்—வெளியூர்காரனிடம்தானே வியாபாரம் செய்கிருன என்று!

அதைப்போல் லில்லி, இந்தக் 'குழந்தை' வெளியூர் கடைத் தெருவுக்கு போயிருக்கிறது. பார்க்கிற பொருளெல்லாம் பளபளப்பாய்தான் தெரியும், அதனுல் அவனை நமபி, நீ ஏமாறப்போகிருய். அவன் இநதியா வந்து சேரும்போது ஒரு பெண்ணுடன்—புது மனைவியுடனதான் வருவான. நீ காணததான போகிருய்."

தினமும் இதே பேச்சு! நான் தனியாக இருக்கின்ற நேரங்களில எலலாம இதே பேச்சு. ராஜா, ஒரு பெண்ணுடன வருவான். தன புதிய மனைவியுடன வருவான், இதையே திருப்பித் திருபபிச சொலலிக்கொணடிருந்தான ஜான்.

எனக்கு பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது. நானே பல சமயங்களில் எண்ணிககொள்வேன. நம அத்தான அபபடிப்பட்டவரா? என்னை ஏமாறறிவிடுவாரா! என் நெஞ்சில் இந்தக் கேள்விகள் எழுந்து கொண்டே இருக்கும்! இதற்கு பதிலும் நானே கூறிக் கொள்வேன் என் நெஞ்சிற்கு. 'சே, நம் அத்தான் அப்படிப்பட்டவர் அல்ல. என்னை ஏமாற்றமாட்டார்' என்று.

பின்னுல் ஏற்படப் போகின்ற ஏமாற்றத்திற்கு இது முன்னறிவிப்பாக இருக்குமோ!

என் நெஞ்சில் இருந்து வேறு என்ன பதில் வரும், நானே வாதி, பிரதிவாதி, சாட்சி நீதிபதி எல்லாம்—பின் வேறு என்ன பதில் வரும்! என்னை நானே ஏமாற்றிக் கொள்கிறேனே, ஜான் சொன்னபடி நடந்திடுமோ எனறெல்லாம் நான் எண்ணிக் கொள்வேன். ஏன் நினைக்கமாட்டேன்?

மனம்தானே!

அதுவும் பெண் மனம்!!

தினம் தினம் செத்து பிழைத்துக்கொண்டிருக்கும் என் விசித்திர வாழ்க்கைக்கு, முடிவு நேரம், நெருங்கிக்கொண்டிருந்தது. என் நெஞ்சத்தில் எழும் கேள்விக்கு பதில் கிடைக்கவேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. பதில் எப்படி யிருக்குமோ! பிறகு என் முடிவு! பதிலைப் பொறுத்துதானே என் முடிவு—முடிவான பதில் இருக்கும்.

ஆம் அத்தானிடம் இருந்து கடிதம் வந்திருந்தது. நாளை கப்பலில சென்னை வநது சேருகிருர். துறைமுகத்திற்கு வரச்சொலலி எழுதியிருந்தார். கடிதம் மிகவும் சுருக்கமாக இருந்தது



கடிதம் சுருக்கமாக இருப்பதால் பின்னுல் ஏதாவது பெரியவிஷயம் இருக்குமோ என்றெனன் நான் எண்ணினேன். என மனதில் தனியாக, நெடுமரமாக எழுந்து நின்ற ஒரே எண்ணம—அத்தான், ஜான் சொல்லியதுபோல், ஏதாவது ஒரு பெண்ணுடன் வந்து இறங்குவாரோ! வந்திறங்கினுல்...

மறுநாள் துறைமுகத்திற்கு நானும ஜானும் தான சென்ருேம் என் நெஞ்சத்தீ எரிந்து கொண்டே இருந்தது. அவன் என்னை ஊற்றிக்கொண்டே வந்தான்! நெஞ்சத்தீ அணையப் போகிறதா, அலலது காடடுத்தீ போல பரவப் போகிறதா! சில யுகஙகளதான் துறைமுகத்தில் காததிருநதோம். கப்பல் வந்து சேர்ந்தது, என கண்கள என அத்தானின் முகததை தேடின. ஐயோ! என்ன இது, அததானுடன மற்ருெரு பெண. அததான் எங்களைப பார்தது கையை காட்டி அந்தப் பெண்ணிடம் ஏதோ சொலலிககொண்டிருந்தார். என் தலையில் இடிவிழுநததுபோல ஓர் உணர்ச்சி. இப்போது ஜான் ஏளனச் சிரிபபுடன் என்னை பார்ப்பானே நான் அவனை எப்படிப் பார்ப்பேன் நான ஜானின பக்கம் மெதுவாக திரும்பினேன அதிசயம், அவன முகததில் ஏளனச சிரிப்பிலலை. அவன் முகம பரிதாபமாக இருந்தது. ஒருவேளை எனககாகப் பரிதாபபபடுகிருனே!

அவனை, அழைத்துக்கொண்டு நான் துறைமுகத்தைவிட்டு கிளம்பினேன்

நானும், ஜானும் டாக்சியில் சென்றுகொண்டிருந்தோம், என் நினைவுகள் என் அத்தான் ராஜாவையே சுற்றிக்கொண்டிருந்தது. எனக்கு எவ்வளவு பெரிய ஏமாற்றத்தை கொடுத்துவிட்டார். ஆண்வர்க்கம் ஏமாற்றுவதையே தொழிலாககொண்டுவிட்டதே—உலகம் தோன்றியதிலிருந்து.

நான் எதிர்பார்த்தபடி கப்பலும் வந்தது. அத்தானும் வந்தார்—என் காதலரும் வந்தார்—ஆனால் யாரோ 'ஒரு பெண்ணுடன்', அதாவது என் காதல் வரவில்லை.

ஜானை திரும்பிப் பார்த்தேன். அவன்முகம் வாடியிருந்தது. எனக்காக அவனும் வருந்துகிறான்போல் இருக்கிறது. என் அத்தானைவிட இவன எவ்வளவோ மேல்—உண்மையிலேயே அவன் சொல்லியதுபோல் களங்கமில்லாமல் என்னிடம் அவன் காதலை வெளியிட்டான்.

என் அத்தானுக்கு சரியான பாடம் கற்பிக்கப் போகிறேன். பழிககுப்பழி வாங்குகிறேன், என் அத்தானை.

துறைமுகத்தைவிட்டு வெளியே வந்த ராஜா, லில்லியையும், ஜானையும் தேடிப்பார்த்தான் இருவரையும் காணவில்லை. அவன் கார்பட்டும் நின்றுகொண்டிருந்தது அருகில் சென்று டிரைவரை விசாரித்தான். "அவாகள் இருவரும் கார்ல்தான் வந்தார்கள் ஆனால் ஏதோ அவசர வேலை இருப்பதாக சொல்லி, டாக்சியல் சென்றுவிட்டாாகள" என்றான் டிரைவர்.

ராஜாவுக்கு ஒன்றுமே புரியவில்லை என்னை சந்திப்பதைவிட அவசரம், அவளுக்கு என்ன இருக்க முடியும் என்று ராஜா நினைததுக்கொண்டே. 'வா, எமிலி" என்று, அவனுடன வந்த பெண்ணை அழைததுக்கொணடு காரில் ஏறிககொண்டான்.

வீட்டை அடைந்ததும் அம்மாவைப்பார்த்து விஷயததை கேட்டான. 'உன்னை அழைத்துக்கொண்டு வருகிறேன் என்று சொல்லித்தான போனார்கள் வேறு ஒனறும எனககுத தெரியாது' என்றார்கள்.

'சரி, ராஜா பயணம் நன்றாகஇருந்ததா, வியாபாரங்களை சரிவர முடிததுவிட்டாயா' என்று கேட்டார்கள் அவன் எதற்கும் பதில் சொல்லவில்லை.

அவனுக்கு லில்லியின் கவனமாகவே இருந்தது.

அன்று முழுதும் லில்லியையும் ஜானையும் தேடினான், எங்கு தேடியும அவாகள் கிடைககவிலலை

மறுநாள் மாலை, லில்லியை தேடிவிட்டு. காரில் வீட்டுககு திருமபினான ராஜா. அவன் கார உள்ளே நுழையும்போது வீட்டைவிட்டு ஒரு கார கிளமபி வெளியே போய்ககொண்டிருந்தது அந்த திறநத காரில் லில்லியும் ஜானும—லில்லி மணமகளகோலததில், ராஜாவுக்கு ஒன்றுமே புரியவில்லை!

காரைவிட்டு உள்ளே ஓடினான்.

"அம்மா, என்ன இது, லில்லி வந்து போகிறாளே"

"தமபி, எனக்கும் புரியவில்லை. உள்ளே வந்தாள் என் காலில் வந்து விழுந்து, அததை கோவிலில் இருந்து நேராக வருகிறோம் எங்களை ஆசிர்வதியுங்கள் உங்கள் மருமகள் எங்கே! நீங்களும், உங்கள் மகனும் மருமகளும எங்கள் வீட்டிற்கு வரவேண்டும். இது எங்கள் புதிய முகவரி" என்று சொலலி இதை கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டாள்.

ராஜாவுக்கு புரிந்துவிட்டது. எவ்வளவு பெரிய பயங்கரம நடந்திருக்கிறது என்று.

திருமதி,

லில்லி அவர்கட்கு, என்னை தவறாக புரிந்துகொண்டீர்கள் நான் எமிலியுடன்வந்து கப்பலில் இறங்கியதும்என்னை தவறாகபுரிந்துகொண்டீர்கள். அவளை என் மனைவி என்று நினைத்துக்கொண்டீர்கள். எப்படி அவ்வளவு சீக்கிரம் அந்த முடிவுக்கு வந்தீர்கள் என்று தெரியவில்லை. நான் அழைத்துவந்த எமிலியைப்பற்றி சொல்லுகிறேன். அவள் ஜானால் கைவிடப்பட்டவள். அவளை இந்தியா அழைத்துவந்து எப்படியாவது ஜானுக்கு திருமணம் முடிக்க நினைத்தேன. என் வாழ்க்கையையே அது வேறுதிசையில் திருப்பிவிட்டது. ஆனால் ஜானை மணந்துகொண்ட நீங்கள். இதையெல்லாம் மறந்து அவனுடன இன்பமாக வாழ்க்கை நடத்தவேணடும் என்று கர்த்தரை பிராத்திககிறேன் என்னைப் பற்றிய தவறான எண்ணம மறைந்திருக்கும் என்று நினைக்கிறேன். நானும் இனி உங்கள் கண்களில் படமாட்டேன் — மறைந்துதான் இருப்பேன்.

உங்கள் சகோதரன்,

ராஜா.

ராஜா, தான் எழுதிய கடிதத்தை மறுமுறையும் படித்தான்.

இதை லில்லி தெரிந்துகொள்வதால் என்ன பயன். நான வேண்டுமானால் அவள் கணகளுக்கு தூயவனாக தெரியலாம்—இந்த கடிதத்தை படித்தபிறகு!

ஆனால், அவள் வாழ்வு!

வாழ்வின் முதல்படியில் காலை எடுத்துவைத்தவளுக்கு இது பெரிய அதிர்ச்சியாக இருக்குமே! ஆகையால், இநதக் கடிதத்தை அவளுக்கு அனுப்பி பயனில்லை. இனி ஜானை நல்லவனாக்க முயலவேண்டும் அதுவே இனி என கடமை!

அவன் கையில் இருந்த கடிதத்தை, அருகில் இருந்த மெழுகுவத்தி விளககில் பிடிததான்.

முதலில் கடிதம நன்றாக எரிந்தது. பிறகு அடங்கிவிட்டது. ராஜாவின் நெஞ்சில் மூணட நெருப்பைப் போல.

அவன் வாய் முணுமுணுத்தது.

"கர்த்தரே என்னை மன்னியும"

மகிழ்ச்சி

சோவியத் நாட்டில், லால்பகதூராருக்கு அமோகமான வரவேற்பு அளித்தனர்; அன்புமலர் சொரிந்தனர்; அவருடைய தன்னடக்கம் நிறைந்த பேச்சினைப் பாராட்டினர்; உதவிகள் பலவும் அளித்திடும் ஆர்வம் காட்டினர்; நட்பினை உறுதிப்படுத்தினர் என்றெல்லாம் இங்குள்ள இதழ்கள் மட்டுமல்ல, நடுநிலை நின்று கருத்துரைக்கும் வெளிநாட்டு இதழ்கள் சிலவும பாராட்டியிருப்பது காண மகிழ்கிறோம்.

பண்டித ஜவஹர்லால் நேரு, புகழ்ஒளி வட்டத்தைத் தமது செயலாலும் அறிவாற்றலாலும் அமைத்துக்கொண்டவர். லால்பகதூராருக்கு அத்தகைய புகழ் ஒளியின் துணையில்லை எனினும், மிகப் பெரிய நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர் என்பதனால், எந்த வெளிநாட்டவரும் அவரை எளிதாகப் புறக்கணித்துவிட முடியாது. அவருடைய இயல்பும், எவரையும தம்மிடம் நட்புகொண்டிடச் செய்திடும் தன்மையுடையது. எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசும் போக்கும், எதையும் தன்னால் மட்டுமே சாதிக்க முடியும் என்ற அகம்பாவமும், இல்லாதவர்; எனவே அவரிடம் 'நட்பு' காட்டிட எவருக்கும் இயல்பாகவே எண்ணம் எழும். எனவே சோவியத் நாட்டுத் தலைவர்கள் அவரிடம் பரிவு காட்டியது வியந்திடத் தக்கதுமல்ல, விளங்கிக்கொள்ள முடியாத புதிருமல்ல.

சோவியத் நாட்டிலே லால்பகதூர் பெற்றுள்ள இந்த நட்புறவு குறித்து, கணக்கெடுக்கும்போது, தெளிவற்ற சிலருக்கு, தவறான கருத்துகள் தோன்றிவிடுகின்றன. அதிலே ஒன்று, அமெரிக்கா காட்டும் நட்புறவைவிட சோவியத் நாடு அதிக அளவில் நட்புறவு காட்டுகிறது என்ற எண்ணம்; மற்றொன்று சோவியத்துடன் நட்புறவு வளர வளர, அமெரிக்காவிடம் உள்ள நட்புறவு தேய்ந்துவிடும் என்பது. இரண்டுமே தவறான கருத்துக்கள்.

அமெரிக்காவும் ரஷியாவும், போட்டி முகாம்கள்; ஒன்றை ஒன்று தாக்கிக்கொள்ளத் துடிக்கும் போர்ப் பாசறைகள் அவை என்று கருதுவாரும் உண்டு.

ஆனால், இவை இரண்டிலுமே அவ்விதமான ஒரு போர் மூண்டால், வெற்றி எவருக்கு தோல்வி எவருக்கு என்று கணக்கெடுக்க முடியாத முறையில் பொது அழிவு ஏற்பட்டுவிடும். எனவே பயங்கரமான போரினைத் தவிர்த்தாக வேண்டும் என்ற எண்ணம் வலுப் பெற்றிருக்கிறது.

அமெரிக்கா-ரஷியா எனும் இரு பெரும் நாடுகளுக்குமே, தம்முடன் நட்பாக இருந்துகொண்டிருக்கும் ஒரு மூன்றாவது நாடு-இந்தியா போன்றதோர் நாடு தேவை,

அந்தத் தேவையை அவசியமுள்ளதாக்கிவிட்டது சீனாவின் போர் வெறியும், ஆதிக்க ஆர்ப்பரிப்பும்.

இந்தியா—ரஷியா நட்புறவு குறித்து அமெரிக்காவுக்கு அல்ல, சீனாவுக்குத்தான் அருவருப்பும் அங்கலாய்ப்பும் அதிக அளவிலே இருக்கும்.

சீனாவும் பாகிஸ்தானும் செய்துவரும் அநியாயத் தாக்குதலைக் குறித்து, வெளிப்படையாகவும் திட்டவட்டமாகவும், ரஷியா கண்டித்திருக்க வேண்டும், என்று நாம் விரும்புவது இயற்கை. அத்தகைய கண்டனம், லால்பகதூர்—கோசிஜின் கூட்ட றிக்கையில் இடம் பெற்றிருந்தால், லால்பகதூரின் ரஷியப் பயணம் முழுவெற்றி அளிததுள்ளது என்று உவகை கொண்டிட வழி ஏற்பட்டிருக்கும்.

ஆனால் இதனைச் சாதிக்க, லால்பகதூரின் ஒரு பயணம் மட்டும் போதாது; அதற்கு முன்பும் பின்பும், தொடர்ந்தும், இந்தியப் பேரரசின் இராஜதந்திரத் துறையினர் திறமையுடன் பணி புரிந்து தக்க சூழ்நிலையைச் சமைய வைத்திருக்க வேண்டும். இதிலே இது வரை பெருமைப்படத்தக்க விதமான வெற்றி கிட்டவில்லை. லால்பகதூரின் பயணத்தால் கிடைத்துள்ள நம்பிக்கையூட்டும் சூழ்நிலைக்குப் பிறகேனும், பேரரசின் இராஜதந்திரத் துறையினர் திறமையுடன் பணியாற்றிட வேண்டும்.

எவ்வளவுதான் வேதனை தருவதாக இருப்பினும் ஒரு உண்மையை மறந்து விடுவதற்கில்லை; பிற நாடுகளைத் தான் பின்னிடும் வலையில் வந்து விழும்படிச் செய்வதில் பாகிஸ்தானின் ராஜதந்திரத் துறையினர் பெற்றுள்ள அளவு வெற்றியை இந்தியப் பேரரசு பெற்றிடவில்லை. நியாயத்தையும் உண்மையையும் மெய்ப்பித்துக் காட்டிடுவதிலேகூட வெற்றி போதுமான அளவு கிட்டவில்லை.

பாகிஸ்தான், பொதுஉடைமை ஆபத்தைத் தடுக்க என்று சொல்லி, அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்து உதவிகளைப் பெற்றுக் குவித்துக்கொண்டது; ஆனால் அதே பாகிஸ்தான், எந்த சீனாவை அமெரிக்கா வெறுக்கிறதோ அதே சீனாவுடனும் 'கூட்டு' சேர்ந்து கொள்கிறது, ரஷியாவிலும் 'நட்பு' பெறுகிறது

பாகிஸ்தான், சீனா, இருநாடுகளுமே, ராஜதந்திரத் துறையில் மும்முரமான கவனம் செலுத்தி, தமது அக்ரமங்களுக்கெல்லாம் திரையிட்டுக் கொள்கின்றன.

பாகிஸ்தான் சீனா, போல கபடநாடகமாடவேண்டும் என்று நாம் கூறவில்லை; ஆனால் நியாயத்தை விளக்கி மெய்ப்பித்து நட்புறவு பெற்றுக்கொள்வதில் போதுமான திறமையைப் பயன்படுத்தியாகவேண்டும் என்பதனையே வலியுறுத்துகிறோம். லால்பகதூரின் ரஷியப் பயணத்திலே கிடைத்துள்ள மகிழ்ச்சிதரும் சூழ்நிலையைத் தக்கவிதமாகப் பயன்படுத்திக்கொண்டு, பேரரசின் ராஜதந்திரத்துறை செம்மையாகப் பணியாற்ற முனையவேண்டும என விரும்புகிறோம்.

❋

'காஞ்சி'
ஆண்டு மலர்
ஜூலைத் திங்களில்
வெளிவருகிறது.

?! வினா-விடை

(1) நேர்முகத் தேர்தல் முறையில் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று காமராஜர் கூறுகிறாரே, ஒப்புக்கொள்கிறீர்களா?

நான் மட்டுமல்ல, எதிர்க்கட்சியினர் பலரும் நேர்முகத் தேர்தல் முறையை ஒப்புக்கொள்பவர்களே. எங்களிடம் கேட்பானேன். போய் கேட்கச் சொல்லுங்கள் சர்க்காரை நடத்திக் கொண்டிருக்கும் பக்தவத்சலம் அவர்களிடம்! அவர்தான், காமராஜர் கூறும் யோசனையை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்.

(2) தமிழ் ஆட்சி மொழியாகத் தமிழகத்தில் இருக்க வேண்டும் என்ற சட்டம் ஏட்டளவில் இருப்பதாகச் சொல்கிறாரே காமராஜர், உண்மையா?

உண்மையைத்தான் கூறுகிறார் காமராஜர். ஆனால் நல்ல வேளையாகத் தப்பித்துக்கொண்டார். தமிழை ஆட்சி மொழியாக்கும்படி சர்க்காரை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள தமிழரின் அறிவுப் படை நடத்த திட்டமிட்ட பேராசிரியர் இலக்குவனாரைப் பாதுகாப்புச் சட்டப்படி பக்தவத்சலம் சர்க்கார் கைது செய்திருக்கிறதே. காமராஜரை, போனால் போகட்டும் என்று பக்தவத்சலம் விட்டுவைத்திருக்கிறார் போலிருக்கிறது.

(3) ஒரிசா பட்நாயக் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ஊழல் குற்றச் சாட்டு கிளம்பி இருந்ததே என்பதால் இந்தக் கேள்வியோ! பட்நாயக் வழக்கம் போல் காங்கிரஸ் தலைவர் வேலை பார்த்துக்கொண்டுவருகிறார். சில நாட்களுக்கு முன்பு பாதுகாப்பு சம்பந்தமான விஷயம் பற்றி பாதுகாப்பு மந்திரி சாவனுடன் பேசினார் என்று செய்தி வந்ததே. பார்க்கவில்லையா!!

(4) ஷேக் அப்துல்லா, ஊட்டியில் சினிமா பார்த்தாராமே?

ஆமாம்! பார்த்த படம் பொறுத்தமானதுதான். ஒரு பேராசிரியர்; அவர் ஒரு ஆராய்ச்சி நடத்தி, ஒரு மருந்து கண்டுபிடிக்கிறார்; அதைச் சாப்பிட்டுவிட்டால் ஆள் சுபாவமே மாறிவிடுகிறது. ஷேக்அப்துல்லாவுக்கும் அப்படித்தான், திடீர் திடீரென்று இயல்பு மாறுகிறது.

(5) காங்கிரஸ் அரசு அமைத்த சிந்திரி உர உற்பத்தித் தொழிற்சாலையைப்பார்ப்பவர்கள் பிரமித்துப் போகிறார்கள் தெரியுமா என்று கேட்கிறார் ஒரு நண்பர் — என்ன சொல்லுவது?

சிந்திரியில் 1959ம் ஆண்டிலிருந்து பத்துகோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது என்ற தகவலை, தணிக்கைக் குழு காட்டுகிறது, அதைப் பார்க்கச் சொல்லுங்கள் உங்கள் நண்பரை! பிரமிக்க மாட்டார், வெட்கப் படுவார்!!

(6) அசோக்மேத்தா, காங்கிரசைப் பற்றிக் குறை கூறி வந்ததைக் காங்கிரஸ் தலைவர்கள் அடியோடு மறந்துவிட்டார்களே, எப்படி?

காங்கிரசைக் குறை கூறிக் கொண்டிருந்ததை அசோக் மேத்தாவே மறந்துவிட்டாரே, அப்படித்தான்! ஆனால் மக்கள் மறக்கவில்லை! அதுதானே முக்கியம்.

(7) இலங்கையில் அமைந்திருக்கும் சேனநாயகா சர்க்காரிடம் அங்குள்ள தமிழர்கள் பற்று காட்டக் காரணம் என்ன?

சேனநாயகா, தமிழர்களை மதிப்பதால்! பண்டார நாயகா சர்க்காரைப்போல தமிழர்களின் உரிமையையும் தன்மானத்தையும் பறிக்க முற்படாததால். சிங்கள எழுத்திலே இருந்துவந்தமோட்டார் அறிவிப்புப் பலகைகளைக் கூட சேனநாயகா சர்க்கார், தமிழரின் உணர்ச்சியை மதித்து எடுத்து விட்டாராமே.

(9) கெனியாவில் ஒரே கட்சி ஆட்சிமுறை ஏற்பாடாகிறதாமே, அப்படியானால், அந்த நாட்டிலே கட்சிப் பூசல்கள் ஒழிந்து போகுமல்லவா?

ஒழிந்துபோகும் என்று எண்ணித்தான், பல கட்சிகள் வேண்டாம் ஒரே கட்சி மட்டும் இருந்தால் போதும் என்று கெனியா தலைவர் கெனியாடா கூறுகிறார். ஆனால் மற்றக் கட்சிகளைக் கலைத்துவிட்டதால் பூசல்கள் ஒழிந்துவிடவில்லை. பூசல், அந்த ஒருகட்சிக்குள்ளாலேயே புகுந்து விட்டது. அந்தக் கட்சியில் உள்ள இரண்டு முன்னணி மந்திரிகளுக்குள் பலமான கருத்து வேறுபாடு ஏற்பட்டு விட்டிருக்கிறது — ஒருவர் ரஷியா பக்கம் அதிகமாகச் சாய விரும்புகிறார்; மற்றொருவர் அது கூடாது, அமெரிக்காவுடனும் மேற்கத்தி நாடுகளுடனும் அதிகத் தொடர்பு கொள்ள வேண்டும் என்கிறார். மந்திரிகளுக்குள் ஏற்பட்டுள்ள இந்த கருத்து வேறுபாடு, அந்த 'ஒரே கட்சி'க்குள் இரண்டு கட்சிகளை உண்டாக்கி விட்டிருக்கிறது. கட்சிப்பூசல் ஒழியவில்லை. தனித் தனிக் கொடி போட்டுக் கொண்டு கட்சிப் பூசலை நடத்துவதற்குப் பதிலாக, ஒரே கட்சிக் கொடியின் கீழ் இருந்தபடியே ஒருவருக் கொருவர் சண்டை போட்டுக் கொள்கிறார்கள். தனித் தனிக் கட்சிகள் இருந்த போது இருந்த பூசலைவிட, இது மோச

மானதாகி வருகிறது: ஆட்சியை நடத்தும் கட்சியை வலிவிழக்கச் செய்து வருகிறது.

(10) இந்தியப் பேரரசின் தொழில் மந்திரி சஞ்சீவய்யா எப்படிப்பட்டவர்?

தொழிலாளர்களுக்கு உள்ள குறைகளை எல்லாம் நன்முக அறிந்தவர்; ஒப்புக்கொள்கிறவர்; அதே நேரத்தில் அந்தக் குறைகளைப் போக்காமல் இருந்து வருபவர். தொழிலாளர்களுக்கு உள்ள குறைகளை பார்லிமெண்டில் அவரும் பேசுகிருர், உறுப்பினர்களும் பேசுகிருர்கள். தொழிலாளர்களுக்கு உள்ள இன்னலும் அப்படியே இருந்துவருகிறது.

(11) சேலம் இரும்பாலைபற்றி மந்திரி வெங்கடராமன இபபோது என்ன சொல்லுகிருர்?

நமக்கேன் வீண்வம்பு என்று எண்ணிககொண்டு விட்டார் போலிருக்கிறது. வெளிநாட்டுச் செலாவணி கிடைக்காது; மாநில அரசே இரும்பாலை அமைக்க வழி ஏற்படாது என்று பேரரசின் இரும்பு மந்திரி மிரட்டியதும், 'கப்சிப்' என்று ஆகிவிட்டார்.

(12) கள்ளமார்க்கட்காரரிடமிருக்கும் கறுப்புப் பணத்தை வெளியே கொண்டுவர, டி. டி கே. எடுத்துக் கொண்ட முயற்சிபற்றி என்ன நினைககிறீர்கள்?

ஒரு கதைதான் என் நினைவிற்கு வருகிறது. ஒருவனுடைய வாயிலே சுண்டெலிக் குட்டி புகுந்து உள்ளே போய்விட்டதாம். அதை வெளியே எடுக்க என்ன வழி என்று நண்பனிடம் கேட்டதற்கு வாய்க்கு நேரே கருவாட்டுத் துண்டு ஒன்றைக் காட்டு, அந்த வாசனையை மோப்பம் பிடித்து, உள்ளே இருக்கும் சுண்டெலி வெளியே வந்துவிடும் என்று யோசனை சொன்னுனும். கறுப்புப் பணத்தை வெளியே கொண்டுவர, டி. டி. கே. கையாளும் முறை அதுபோலத்தான் இருக்கிறது.

(13) கழகத்தின் செல்வாக்கைக் குறைக்க, எதையாவது இட்டுக் கட்டிப் பேசுபவர்களை எதற்கு ஒப்பிடலாம்?

திருவிழாக் கும்பலில் புகுந்து, வேடிக்கை பார்ப்பவரிடம் பொருளைக் களவாடிடப் பார்க்கும் சில்லறைகளுக்கு ஒப்பிடத் தோன்றுகிறதல்லவா!!

(14) வேறு எந்த நாட்டிலாகிலும் தமிழ் தெரிந்த பிரதம மந்திரி இருக்கிருரா?

சிங்கப்பூர் பிரதமர் லீ தமிழ் கற்றுக்கொண்டு வருவதாகத் 'தமிழ் மலர்' தெரிவித்திருக்கிறது.

(15) பூமி—அதாவது பூலோகம் எவ்வளவு காலமாக இருந்து வருகிறது?

சுமார் 200 கோடி ஆண்டுகளாக என்று நிபுணர்கள் கூறுகிருர்கள்.

(16) கடற்பஞ்சு தாவர இனமா விலங்கினமா?

கடற் பஞ்சு கடலில் வாழும் உயிரினம். முதுகெலும்பு இல்லாதது அதன் உடலில் எண்ணற்ற துளைகள் இருக்கிறது என்கிருர்கள்.

(17) கள் குடிப்பதால், உணவுப் பிரச்சினைக்கு ஓரளவு பரிகாரம் கிடைக்கும் ஏனென்ருல் கள்ளிலே சத்து இருக்கிறது என்கிருர்களே அதற்கு என்ன சொல்லுகிறீர்?

அவர்கள் சொல்லும் 'சத்து' கள்ளிலே மட்டுந்தானு இருக்கிறது. அந்தச் சத்து உள்ள மாத்திரைகள் ஏராளமாகக் கிடைக்கின்றனவே — மலிவாக. அவைகளைச் சாப்பிட்டு 'சத்து' பெறலாமே—மதியும் கெடாது—குடியும் நாசமாகாதே.

(18) அமெரிக்காவில் சுதந்திரச் சிலை ஒன்று இருக்கிறதாமே, அதன் விவரம் என்ன?

சுதந்திரச் சிலை 1886ல் பிரன்ச் சுக்காரர்களால் அமெரிக்கருக்கு அளிக்கப்பட்டது. உயரம் 151-அடி. மேடை உயரத்தையும் சேர்த்துக் கணக்கெடுத்தால் 305 அடி!

(19) பெரிய மனிதர்கள் சிறிய செயலில் ஈடுபடலாமா!

சிறிய செயலில் ஈடுபடுவோரைப் பெரியமனிதர் என்று குறிப்பிட எப்படித் துணிகிறதய்யா, உமக்கு!!

(20) உலகிலேயே தரமுள்ளதான மிகப் பழய நூல் எது?

நமக்குக் கிடைத்துள்ளனவற்றில், தொல்காப்பியம்தான் மிகப் பழம் பெரும் நூல்.

(21) உலகிலேயே சிறந்த வள்ளல் யார்? இருப்பிடம் எது?

முகில்! வானிலிருக்கிறது என்பார்கள். ஆனுல் முகில்கூட முதலிலே கீழே உள்ள தண்ணீரை வெப்பத்தின் உதவிகொண்டு தன்னிடத்தே இழுத்துவைத்துக் கொண்டு பிறகுதான் மழையாகப் பொழிந்தளிககிறது.

(22) தீவிர அரசியல்வாதிக்கும் நிதானமுள்ள அரசியல் வாதிககும் என்ன வித்தியாசம?

காட்டுத்தீ—வீட்டு விளக்கு,—இவைகளுககுள்ளது போன்ற வித்தியாசந்தான்.

★

சின்ன காஞ்சிபுரம் 66, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால்
அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.